# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு

## 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

**தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

நெஞ்சை அள்ளும் மணியாரம் எனப் புகழப்படுவது

அ) வளையாபதி ஆ) குண்டலகேசி

இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

ஏழு நரம்புகளை உடைய வீணையின் இசை

அ) திறம் ஆ) விளரி இ) குரல் ஈ) பண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

பின்வருவனவற்றுள் பண்புத்தொகை

அ) விளைபயிர் ஆ) வட்டக்கல் இ) கத்திகோடரி ஈ) பவளவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'வளவேல் நற்கண்ணி' எனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் பெண்

அ) மணிமேகலை ஆ) மாதவி இ) மாதுரி ஈ) கண்ணகி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'கூத்தி' என்ற சொல் குறித்து நிற்பது

அ) பாடினியை ஆ) விறலியை இ) உழத்தியை ஈ) மங்கையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

"வாதோழியே இனியும் இப்படி இருக்க முடியாது" என்று கூறிய கவிஞர்

அ) அம்பி ஆ) சாலை இளந்திரையன்

இ) இரவி ஈ) உதயை வீரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

யாழ் நூலகத்தை வடிவமைத்தவர்

அ) தம்பையா ஆ) கே. நரசிம்மன்

இ) க. மு. செல்லப்பா ஈ) ஆர். இரங்கநாதன்

இலக்கிய வகையால் சொற்கள்

அ) நான்கு வகை
ஆ) மூன்று வகை
இ) ஆறு வகை
ஈ) இரண்டு வகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'இரக்கப்போனாலும் சிறக்கப்போ' என்ற பழமொழி குறிப்பது

அ) தேட்டம் பெருகும்
ஆ) வறுமையிற்செம்மை
இ) முன்னேற்பாடு
ஈ) உண்மையின் உயர்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

. சோழநாட்டில் பிறந்து சேரநாட்டில் தெய்வமானவள்

அ) கண்ணகி ஆ) மாதவி இ) மணிமேகலை ஈ) ஐயை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

. பொதுப் பெயரோடு சிறப்புப் பெயருக்கு எடுத்துக் காட்டு

அ) வாழைமரம்
ஆ) பனங்கிழங்கு
இ) மன்னன் பாரி
ஈ) பலாக்காடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

. இராவணனைத் தாழ்த்தி எழுதப்பட்ட நூல்

அ) இராமாயணம்
ஆ) சிலப்பதிகாரம்
இ) குண்டலகேசி
ஈ) இராவணகாவியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

. 'கயல்விழி' என்பது

அ) பண்புத் தொகை
ஆ) உவமைத் தொகை
இ) உம்மைத்தொகை
ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

. புதுக்கவிதை தோற்றம் பெற்றது

அ) 20ஆம் நூற்றாண்டில்
ஆ) 19ஆம் நூற்றாண்டில்
இ) 18ஆம் நூற்றாண்டில்
ஈ) 16ஆம் நூற்றாண்டில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

எழுதாப் பாடல்கள் என அழைக்கப்படுவன

அ) தத்துவப்பாடல்கள்
ஆ) பக்திப்பாடல்கள்
இ) நாட்டுப்புறப்பாடல்கள்
ஈ) பாரதிப்பாடல்கள்

ஓர் இனத்தின் அடையாளத்தைக் காட்டுவது

அ) பணம் ஆ) தொழில் இ) மொழி ஈ) உடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

பூங்காவில் 'செக்கச்சிவந்த' மலர்கள் அழகாக மலர்ந்திருந்தன. இதில் 'செக்கச்சிவந்த' என்பது

அ) இரட்டைக்கிழவி ஆ) அடுக்கிடுக்குத் தொடர்
இ) இணைமொழி ஈ) உவமைத் தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

காவேரியைப் பெண்ணாக உருவகித்துப் பாடியவன்

அ) மாநாய்க்கன் ஆ) மாசாத்துவன் இ) கோவலன் ஈ) மாடலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

யாழ்நூலகம் எரியூட்டப்பட்ட ஆண்டு

அ) 1959 ஆ) 1981 இ) 1954 ஈ) 1933

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

மாற்றான் என்ற சொல் குறிப்பது

அ) நண்பனை ஆ) புதல்வனை இ) மகனை ஈ) பகைவனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன

அ) ஐம்புலன் ஆ) ஐந்திலக்கணம் இ) ஐம்பொறி ஈ) ஐம்பேராயம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தம்பி நன்றாகப் படித்தான். இச் சொல்லியத்தில் தோன்றா உறுப்பு

அ) அடைமொழி ஆ) செயப்படுபொருள்
இ) பயனிலை ஈ) எழுவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புல்லைப் புடுங்கி வைச்சேன்
புறவளைவைத் தூத்து வைச்சேன்
என்ற நாட்டார் பாடல்

அ) தாலாட்டுப்பாட்டு ஆ) தொழிற்பாட்டு
இ) காதற்பாட்டு ஈ) ஒப்பாரிப்பாட்டு

அசேலனை வெற்றிகொண்ட தமிழ் மன்னன்

அ) சேனன்　　ஆ) குத்திகன்

இ) எல்லாளன்　　ஈ) சங்கிலியன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

சோழரது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் புதிய தலைநகராக இருந்தது

அ) பொலநறுவ　　ஆ) அநுராதபுரம்

இ) திருகோணமலை　　ஈ) மன்னார்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

'தமிழிசை' எவ்வகைப் புணர்ச்சி

அ) தோன்றல்　　ஆ) திரிதல்　　இ) விகாரம்　　ஈ) இயல்பு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

கட்டினான் என்ற வினை முற்றின் பிறவினை

அ) கட்டுவான்　　ஆ) கட்டுவித்தான்

இ) கட்டிலன்　　ஈ) கட்டுகின்றான்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

பின்வருவனவற்றுள் இணைமொழி

அ) அருமைபெருமை　　ஆ) கூட்டங்கூட்டம்

இ) சின்னஞ்சிறிய　　ஈ) வண்ணவண்ண

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

மாநாய்கன் என்பவன்

அ) நகைவணிகன்　　ஆ) உடைவணிகன்

இ) கடல்வணிகன்　　ஈ) நிலவணிகன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

இலங்கையில் தமிழ்ச்சிற்றரசுகள் அமைந்த இடங்களில் ஒன்று

அ) புத்தளம்　　ஆ) மட்டக்களப்பு　　இ) கந்தரோடை　　ஈ) சிலாபம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

**பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

சாலை இளந்திரையனின் கவிதையில் விலையால் உயர்ந்த கல் எது? போற்றுதற்குரிய கல் எது?

________________________________________

________________________________________

________________________________________

அறந்தவறியதால் தன்னுயிரைவிட்ட பாண்டிய மன்னன் இறுதியில் உரைத்தவை எவை?

________________________________________

________________________________________

________________________________________

சோழர் ஆட்சிக் காலத்தில் இலங்கை எப்பெயரால் அழைக்கப்பட்டது?

________________________________________

________________________________________

யாழ் நூலகம் எரியுண்ட செய்தி கேட்டு உயிர்நீத்த அருட்தந்தை யார்?

________________________________________

இராவணகாவியத்தை எழுதியவர் யார்? அவர் எந்நாட்டவர்?

________________________________________

________________________________________

மலையக மக்களைக் கொடுமைப் படுத்துவோர் யார் என நாட்டார் பாடலில் கூறப்படுகிறது?

---

---

வீரையனின் 'இனியும்' என்ற கவிதையில் எதனால் நாய்களும் பேய்களும் நாட்டிடை ஆட்டம் போடுவதாகக் கூறப்படுகிறது?

---

---

புள்ளிகள் 10

**பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- வேங்கைகளாகி விடிவுகள் தேடி
  விழுந்த எம் வீரர்களே

- ஆயிரம் ஆயிரம் மொழி கற்றாலும் - எம்
  தாய்மொழி போல் அது வருமா?

- பொங்கும் கடலும் பொழியும் நிலவும்
  உங்கள் கதை சொல்லும்

புள்ளிகள் 10

**பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அழகுணர்ச்சிக்கு விருந்தளிப்பது கலையாகும். இயற்கையில் காணும் வானம், _ல், அருவி, ஆறு போன்றவை கலையாக மாட்டாது. இவற்றைக் கலைத்திறன் டைத்த ஒருவன் படமாக வரைந்து காட்டினால் அது கலையாகும். கண்டவர் னதைக் கவர்ந்து வியப்படையச் செய்யும் ஓவியத்தை உயிர் ஓவியம் என்கின்றோம். வ்வொரு நாட்டினரும் பெரிதும் விரும்பிப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். ண்டைத் தமிழகத்தில் ஓவியக்கலை மிகவும் சிறந்து விளங்கியது. இராசராச சாழன் அமைத்த தஞ்சைப் பெருங்கோவிலின் சுவர்களில் வண்ண ஓவியங்கள் யிர் பெற்று நின்று காண்போர் மனதைக் கவர்கின்றன.

சித்தன்னவாசல் என்னும் சிற்றூரில் காணப்படும் குகைக் கோயிலில் ரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் காண்போருக்குக் கலை விருந்து அளிக்கின்றன. )க்காலத்தில் ஓவியக்கலை பெரிதும் வளர்ச்சியடைந்து வருகின்றது. ஓவியந் ட்டுவதே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட பலர் ஓவியக்கலையைத் திறம்பட ளர்த்து வருகின்றனர். ஓவியந் தீட்டுவோனின் உள்ளம் அவன் செயலில் லைத்திருப்பதால் பொறுமையில் பண்படுகிறது. இயற்கையைப் படைக்கும் )றைவன் போல் ஓவியன் செயற்கையைப் படைத்து இன்பம் எய்துகிறான்.

காண்போருக்குக் கலைவிருந்தளிக்கும் ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

________________________________________

________________________________________

தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டிய மன்னன் யார்?

________________________________________

3. ஓவியக் கலையை இன்று திறம்பட வளர்த்து வருபவர்கள் யாவர்?

ஓவியக்கலை எங்கே சிறந்து விளங்கியது?

அழகுணர்ச்சிக்கு விருந்தளிப்பது எது?

புள்ளிகள் 10

## இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

உம்மைத்தொகை ____________________

வினைத்தொகை ____________________

எழுவாய் அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி என்பன இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று தருக.

____________________

____________________

தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியம் எழுதுக.

பொலுபொலு ____________________

____________________

அடுக்கிஅடுக்கி ____________________

____________________

கன்னங்கரிய ____________________

____________________

கீறிட்ட இடங்களைப் பொருத்தமாக நிரப்புக.

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|
| காண் | ________ | ________ | ________ |
| எழு | ________ | ________ | ________ |

5. செயப்படுபொருள் குன்றாச் சொல்லியங்கள் இரண்டு தருக.

புள்ளிகள் 15

**பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

புதிதாகப் பழகும் போது பெரும்பாலானோர் நன்றாகவே பழகுவர். புதிய மாணவர் ாளியில் ஒழுங்காகவே நடந்து கொள்வர். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் )றுக்கொடுப்பர். புதிய வணிகன் நல்ல பொருட்களையே விற்பான். புதிய நட்பும் னிமையாகவே இருக்கும். ஆனால் இவை ஒன்றும் சிறப்பல்ல அதற்கு மாறாக ப்வளவு பழைமையான போதும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கை தான் )வாழ்க்கை ஆகும். பழகப்பழக அன்பு குறையாத நட்பும் இத்தன்மையதே. பவர்களின் நட்பு பழகப் பழக அன்பு குறைந்து இல்லாமல் போய்விடும். பழமையான )கும் எக் குறையுமின்றி அன்பின் வழி வந்த நட்பு என்றும் புகழுக்குரியதே. எனவே நவருடன் நாம் பழகும் போது உடனேயே அவரை நட்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. வரது உண்மைத் தன்மை புலப்படும் வரை பொறுத்திருத்தல் வேண்டும். இதனையே நவள்ளுவரும் 'நட்பு ஆராய்தல்' என்ற அதிகாரத்தில் சிறப்பாக விளக்கியுள்ளார். க் குறள் வழி நட்புக் கொண்டால் அந்நட்பு என்றும் எப்பொழுதும் துன்பத்தைத் தராது. றாக இன்பத்தையே அள்ளித் தரும்.

சுருக்கத்திற்கான குறிப்புகள் :

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

**ேழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- நாட்டார் பாடல்கள்
- இராவணேசன்
- தாய் மொழியும் தாய்நாடும்.